[2003 ஏப்ரல் 7

185—

மாணவியர் விடுதி

***32861–திரு. ஏ. பூவராகமூர்த்தி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சிறுப்பாக்கம் தொகுதி, பொலம்பாக்கம் மேல்நிலைப் பள்ளி மாணவிகளுக்கு மாணவியர் விடுதி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதிதாக மாணவ, மாணவியர் விடுதிகள் திறக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஏ. பூவராகமூர்த்தி: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் ஏற்கெனவே அச்சிறுப்பாக்கம் தொகுதியில் சூணாம்பேடு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு ரூ.35 இலட்சம் செலவில் மகளிர் விடுதி கட்டிக் கொடுத்துள்ளார்கள். அதேபோன்று, தொழுப்பேடு மேல்நிலைப் பள்ளிக்கு 35 இலட்சம் ரூபாய் செலவில் மகளிர் விடுதி கட்டுவதற்கு டெண்டர் விடப்பட்டு கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்காக இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு என்னுடைய தொகுதியின் சார்பில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், என்னுடைய தொகுதிக்குட்பட்ட பொலம்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஏறக்குறைய 2500 மாணவ, மாணவியர்கள் தற்போது படித்து வருகிறார்கள். நீண்ட தொலைவிலிருந்து அங்கு வந்து படிக்கின்ற ஒரு நிலையினால், மாணவிகள் அங்குத் தங்கிப் படித்தால், இன்னும் அவர்களுக்கு நல்ல வசதிகளும் இருக்கும்; அவர்கள் நல்ல மதிப்பெண்கள் எடுப்பதற்கும், தேர்ச்சி பெறுவதற்கும் ஏதுவாக இருக்கும். எனவே, இந்த நிதியாண்டில் இல்லையென்றாலும்கூட, வருகின்ற நிதியாண்டில் இந்த பொலம்பாக்கம் மேல்நிலைப் பள்ளிக்கு மாணவியர் விடுதியை நம்முடைய இதய தெய்வம் அம்மா அவர்கள் அரசு கட்டிக் கொடுக்குமா என்பதைத்

2003 ஏப்ரல் 7]

தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை, உறுப்பினரின் கருத்தை, நிதிநிலை சீரான பின்பு மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *186*. திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

186—

பேருந்து வசதி

•2146—திரு. பெ. பழனியப்பன்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலூர் அம்மாபாளையம் மலைப் பகுதிக்குப் பள்ளி மாணவ, மாணவிகள் பள்ளிக்குச் சென்று வரும் வகையில் பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலூரிலிருந்து தும்பல் பள்ளிக்கு மாணவ, மாணவிகள் சென்று வரும் வகையில் *4-6-2002* முதல் காலையிலும், மாலையிலும் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *10-25*

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேள்வி கேட்கிறபோது, அந்தப் பள்ளி மாணவர்கள் வசதிக்காக அங்கே பேருந்து இயக்கப்படவில்லை. கேள்வி கேட்டதற்குப் பின்னாலே நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்